அக்டோபர்: 30

## கர்த்தரின் குற்றச்சாட்டு.

### வாசிக்க: ஓசியா 8:12, 10:1

என் வேதத்தின் மகத்துவங்களை எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நிய காரியமாக எண்ணினார்கள். ஓசியா 8:12. தேவன் அருளிய பெரிய ஈவுகளில் ஒன்று வேதமாகும். அதற்கு கர்த்தருக்கு நன்றி சொல்ல வேண்டும். வேதத்தை அனுதினமும் கற்று அதனடிப்படையில் எங்கள் வாழ்விருக்குமானால். அதுவே உன்னதமான சிறந்த வாழ்க்கையாக அமையும். வேதத்தை கனப்படுத்தும் ஒரு மனிதனே தேவனையும் கனப்படுத்துவான். அனேகர் பெற்றோரின் கட்டளைக்காகவும், ஒரு சிலர் கடமைக்காகவும் வேதத்தை வாசிக்கிறார்கள். இப்படி செய்வதை தான் அந்நிய காரியமாக எண்ணினார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அதிகாலையில் எழுந்ததும் காலைக்கடன்களை முடித்து விட்டு. வேதத்தை வாசிக்க வேண்டும். ஆண்டவரே என்னோடு பேசும் என்று சொல்ல வேண்டும். இன்றைய நாளை ஆசீர்வதியும், வழிநடத்தும் என்று கேட்டு. அவரை கனப்படுத்தும் போது நீங்கள் கர்த்தரால் கனப்படுத்தப்படுவீர்கள்.

### கேள்வி:

வேறு என்ன குற்றச்சாட்டை சொன்னார்?

### பதில்:

இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத்தானே கனிகொடுக்கிறது; அவன் தன் கனியின் திரளுக்குச் சரியாய்ப் பலிபீடங்களைத் திரளாக்குகிறான்; தங்கள் தேசத்தின் செழிப்புக்குச் சரியாய்ச் சிறப்பான சிலைகளைச் செய்கிறார்கள். ஓசியா 10:1. இஸ்ரவேல் மக்களை திராட்சைச் செடிக்கு ஒப்பிட்டு, பலனற்ற திராட்சச்செடி என்று சொல்லுகிறார். பலனற்று இருப்பதற்கு காரணம் அது தனக்கு தானே கனிகொடுக்கிறது. ஒரு மரத்தின்கனி என்பது மற்றவர்களின் நலனுக்காக அவர்களின் ஆகாரத்காக உபயோகப்படுத்தப்படுகிறது. அது போலவே மனிதர்களாகிய நாம் பிற மனிதர்களின் நலனில் அக்கறைப்பட்டு. அவர்களின் தேவைகளுக்கு அவர்களின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும். சிறுவர்களாகிய நீங்கள் எப்படி பிறர் நலனில் அக்கறைப்படலாம்? இயேசப்பாவை குறித்து அவர் மீட்பர் இரட்சகர் பரம தகப்பன் என்று சக மாணவ மாணவிகளுக்கு சொல்லலாம். வேதத்தில் உள்ள சம்பவங்களை அவர்களுக்கு கதை போல் சொல்லலாம். அன்றாடம் ஜெபிக்கும் பொழுது பிறருடைய தேவைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும். பாடி துதித்து கர்த்தருக்கு உதடுகளால் நன்றி சொல்ல வேண்டும். நீங்கள் நிலையாக, நிரந்தரமாக கனிகொடுக்க வேண்டும் என்றால் செடியாகிய கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். தேவன் தந்த ஞானத்தை, ஆசீர்வாதத்தை உலக காரியங்களுக்காக பயன்படுத்தக் கூடாது. சாதிப்பதற்காகவோ, பெருமைக்காகவோ, புகழுக்காகவோ காரியங்களில் ஈடுபடக்கூடாது. தேவ நாம மகிமையே முக்கிய நோக்கமாயிருக்க வேண்டும்.

அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். **சங்கீதம் 1:3**

<u>ஜெபம்</u>

பரலோக தகப்பனே.
கடமைக்காகவோ, வற்புறுத்தல்களுக்காகவோ வேதத்தை படிக்க மாட்டோம்.
உண்மையாக மனப்பூர்வமாக வாசித்து அதனடிப்படையில் வாழுவோம்.
கனி கொடுக்கும் பிள்ளைகளாயிருப்போம். ஆமென்